"தமிழ் எங்கள் உயிருக்கு நேர்"

# தமிழ்க் கல்விச்சேவை சுவிற்சர்லாந்து

Tamil Education Service Switzerland

# பொதுத்தேர்வு 2018

## தமிழ்மொழி ஆண்டு 12

**நேரம்: 150 நிமிடம்**

**சுட்டெண்:** ____________________

## பகுதி - 1

**1. மிகப்பொருத்தமான விடைக்குரிய கட்டத்திற்குள் புள்ளடி இடுக.**

1 2 3

1. தமிழில் நாவலை முதன்முதலாக எழுதியவர்
   1. மாயூரம் வேதநாயகம்பிள்ளை
   2. வ.ஐ.ச. ஜெயபாலன்
   3. புதுமைப்பித்தன்

2. தமிழ்மொழியின் சிறப்பெழுத்தாகக் கொள்ளப்படுவது
   1. ல
   2. ள
   3. ழ

3. உலகத் தமிழாராய்ச்சி மாநாடு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஆண்டு
   1. 1974
   2. 1983
   3. 1981

4. ஆற்றுப்படை நூல்கள் இடம்பெற்றுள்ள தொகுப்புநூல்
   1. எட்டுத்தொகை
   2. பத்துப்பாட்டு
   3. ஐஞ்சிறுகாப்பியங்கள்

5. 'வரப்புயர நீருயரும்...' இப்பாடலைப் பாடியவர்
   1. ஔவையார்
   2. வெள்ளிவீதியார்
   3. காக்கைபாடினியார்

6. உயிர்பிரியும் வேளையிலும் கொடை கொடுத்தவன் கர்ணன். இதில் கொடை என்பதன் பொருள்
   1. மறம்
   2. அறம்
   3. அதர்மம்

7. தொல்காப்பியத்தில் இடம்பெற்றுள்ள நூற்பாக்களின் எண்ணிக்கை
   1. 1160
   2. 1610
   3. 1600

8. இருபெயரொட்டுப் பண்புத்தொகையாக அமைந்துள்ள சொல்
   1. அன்னப்பறவை
   2. செந்தாமரை
   3. பூங்குழல்

9. கண்ணன் இதனைச் செய்வேனா? இதில் வந்துள்ள வழு
   1. மரபுவழு
   2. பால்வழு
   3. இடவழு

10. 'வெள்ளத்தனைய மலர்நீட்டம் மாந்தர் தம்...' இதில் நீட்டம் என்பதன் எதிர்ப்பொருட்சொல்
    1. நீட்சி
    2. குறுக்கம்
    3. விரிவு

1 2 3

11. ஈழத்துத் தமிழிலக்கிய வரலாற்றைத் தொடக்கிய சங்கப்புலவர்
    1. நாகலிங்கம்பிள்ளை
    2. பூதந்தேவனார்
    3. ஜெயகாந்தன்

12. சூதர் கழகம் அரவம் அருக்களம் பேதைகள் அல்லார் புகாஅர். இதில் அளபெடை பெற்றுவந்த சொல்
    1. அல்லார்
    2. புகாஅர்
    3 அருக்களம்

13. நீங்கள் வேலைக்குப் போகாதீர்கள். இவ்வாக்கியம்
    1. எதிர்மறை ஏவல்
    2. உடன்பாட்டு ஏவல்
    3. உடன்பாட்டு கூற்று

14. ஈழத்தில் நடந்தபோர் தமிழ்மக்கள் மனங்களில் ஆறாத வடுவை ஏற்படுத்தியுள்ளது. இதில் வடு என்பதன் பொருள்
    1. நோய்
    2. காயம்
    3. பயம்

15. தகுதியற்றவர்களுக்கு வழங்கப்படும் பதவி, குரங்கு கைப் பூமாலை போலச் சிதையும். இதில் இடம்பெற்றுள்ள தொடர்
    1. உம்மைத்தொடர்
    2. உருவகத்தொடர்
    3. உவமைத்தொடர்

16. தவளைக்குப் பேத்தை போல மீனுக்கு
    1. குருளை
    2. குட்டி
    3. குஞ்சு

17. புலம்பெயர் இலக்கியத்தின் முதல் கவிதைத் தொகுப்பு
    1. சமாதானத்தின் பகைவர்கள்
    2. துருவச்சுவடுகள்
    3. யுத்தத்தைத் தின்போம்

18. கற்றறிந்தோர் நட்பானது கரும்பை நுனியிலிருந்து உண்ணல் போன்றது. இதில் நுனி என்பதன் எதிர்ப்பொருட்சொல்
    1. முடி
    2. அடி
    3. தடி

19. உழவனுக்கு உழத்தி போல பாணனுக்கு
    1. பாணி
    2. பாடினி
    3. பாட்டுவிச்சி

20. தொல்காப்பியத்தின் வழிநூலாக விளங்கும் நன்னூலை இயற்றியவர்
    1. அகத்தியமுனிவர்
    2. பவணந்திமுனிவர்
    3. வீரமாமுனிவர்

**1 2 3**

21. ஈழத்தில் டி.எஸ். சேனநாயக்காவால் கொண்டுவரப்பெற்ற குடியுரிமைச்சட்டத்தினால் பாதிக்கப்பட்டோர்
    1. சிங்களவர்
    2. ஆங்கிலேயர்
    3. இந்தியத்தமிழர்

22. கடலும் கடல் சார்ந்த இடமும்
    1. குறிஞ்சி
    2. முல்லை
    3. நெய்தல்

23. இயல்பாக நிகழும் நிகழ்ச்சியொன்றின் மேல் கவிஞர் தம் கற்பனையை ஏற்றிக் கூறுவது
    1. வஞ்சப்புகழ்ச்சியணி
    2. உயர்வுநவிற்சியணி
    3. தற்குறிப்பேற்றவணி

24. சங்ககாலம் என்று குறிப்பிடப்படும் காலப்பகுதி
    1. கி.மு 300 – கி.பி 300
    2. கி.பி 300 – கி.பி 600
    3. கி.பி 600 – கி.பி 900

25. தமிழில் தோன்றிய முதல் பிள்ளைத்தமிழ் நூல்
    1. மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்
    2. திருச்செந்தூர்முருகன் பிள்ளைத்தமிழ்
    3. குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ்

25×1=25 புள்ளி

**2. சேர்த்தெழுதுக.**

1. அருள் + உரை = ______________
2. எட்டு + நூறு = ______________
3. நல்ல + ஒழுக்கம் = ______________
4. பொன் + தொடி = ______________
5. அல் + அங்காடி = ______________
6. விருந்து + ஓம்பல் = ______________

6×½=3 புள்ளி

**3. பிரித்தெழுதுக.**

1. இனவுணர்வு = ____________ + ____________
2. வண்ணக்கிளி = ____________ + ____________
3. கிணற்றுத்தவளை = ____________ + ____________
4. ஐந்திணை = ____________ + ____________
5. வெண்சங்கு = ____________ + ____________
6. நாவலாசிரியர் = ____________ + ____________

6×½=3 புள்ளி

**4. கீழ்க்காணும் திருக்குறள்களை நிறைவுசெய்து அவற்றின் பொருளினையும் எழுதுக.**

1. செல்வத்துள் செல்வம் ______________________

______________________________________

1½ புள்ளி

பொருள்:

______________________________________

______________________________________

______________________________________

______________________________________

1 புள்ளி

2. தன்நெஞ்சறிவது பொய்யற்க ______________________

______________________________________

1½ புள்ளி

பொருள்:

______________________________________

______________________________________

______________________________________

______________________________________



1 புள்ளி

**5. கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. கல்கி ரா.கிருஸ்ணமூர்த்தி எழுதிய வரலாற்றுநாவல்கள் இரண்டினைத் தருக.

1 புள்ளி

2. ஐக்கியநாடுகள் சபையில் 1948ஆம் ஆண்டு ஏற்றுக்கொள்ளப்பெற்ற பிரகடனம் எது?

1 புள்ளி

3. தொல்காப்பியத்தில் இடம்பெற்றுள்ள ஐவகை இலக்கணங்களும் எவை?

1 புள்ளி

4. செம்மொழிகள் எனச் சிறப்பிக்கப்பெற்ற மொழிகள் எவை? 1 புள்ளி

5. அணி என்றால் என்ன? அதன் பயன்பாடுகள் எவை?

2 புள்ளி

6. தொகைநிலைத்தொடர் எத்தனை வகைப்படும்? அவை எவை? 2 புள்ளி

7. மையீற்றுப் பண்புப்பெயர்கள் புணரும் முறைகள் நான்கினைத் தருக. 2 புள்ளி

**6. கீழ்க்காணும் தலைப்புகளுள் ஒன்றினைத் தெரிவுசெய்து எட்டுவரிகளுக்குக் குறையாமல் கவிதை எழுதுக.**

1. செந்தமிழின் செழுமை
2. தடைகளை உடை

4 புள்ளி

**7. கீழ்க்காணும் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

அச்சம் என்பது மடமையடா
அஞ்சாமை திராவிடர் உடைமையடா
ஆறிலும் சாவு நூறிலும் சாவு
தாயகம் காப்பது கடமையடா
கனக விசயரின் முடித்தலை நெறித்து
கல்லினை வைத்தான் சேரமகன்
இமய வரம்பினில் மீன்கொடி ஏற்றி
இயைபட வாழ்ந்தான் பாண்டியனே.
கருவினில் வளரும் மழலையின் உடலில்
தைரியம் வளர்ப்பாள் தமிழன்னை
களங்கம் பிறந்தால் பெற்றவள் மானம்
காத்திட எழுவான் அவள் பிள்ளை
வாழ்ந்தவர் கோடி மறைந்தவர் கோடி
மக்களின் மனதில் நிற்பவர் யார்
மாபெரும் வீரர் மானம் காப்போர்
சரித்திரம் தனிலே நிற்கின்றார்.

1. எமது கடமை எதுவெனக் கவிஞர் கூறுகின்றார்? 1 புள்ளி

2. பாண்டிய மன்னர்களது கொடியில் பொறிக்கப்பட்டிருக்கும் சின்னம் எது? 1 புள்ளி

3. அழியாப் புகழுடன் நின்று சரித்திரம் காண்பவர் யார்? 1 புள்ளி

______________________________

4. திராவிடர்களின் உடைமை எது? 1 புள்ளி

______________________________

5. மழலையின் உடலில் தைரியம் வளர்ப்பவர் யார்? 1 புள்ளி

______________________________

6. இப்பாடலிலிருந்து பின்வருவனவற்றைத் தருக.

அ. மோனையணி ______________ ¼ புள்ளி

ஆ. எதுகையணி ______________ ¼ புள்ளி

இ. பழமொழி ______________ ½ புள்ளி

**8. கீழ்க்காணும் தலைப்புகளுள் ஒன்றினைப்பற்றி 175 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

1. சிற்றிலக்கியங்கள்
2. இன்றைய புலம்பெயர் வாழ்வியலில் தமிழ்ப்பெற்றோர் எதிர்நோக்கியுள்ள சாதக பாதக நிலைமைகளை ஆராய்க.
3. "காற்றுள்ள போதே தூற்றிக்கொள்"

9 புள்ளி

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

## பகுதி - 2

**1. கீழ்க்காணும் உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பம் முதல் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கைக்காக இந்தியாவிலிருந்து ஈழத்திற்கு மலிவான கூலிகளாகக் கொண்டுவரப்பட்ட இந்தியத் தமிழரும் அவர்தம் வம்சாவழியினரும் இந்நாட்டவர் உண்ணும் உணவில் தங்கள் உதிரத்தைக் கலந்துவிடுமளவுக்கு இந்நாட்டுப் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக விளங்குகின்றனர். ஆயினும் அவர்களது வாழ்வு அடிப்படை வசதிகளுமற்ற அறியாமையும் அந்தகாரமும் சூழ்ந்து காணப்படுகிறது. இருப்பினும் மலையகத் தமிழரிடைப் பிறந்த இலக்கியங்கள் இந்நாட்டு மண்ணோடு அவர்களது வாழ்வு பின்னிப் பிணைந்து கிடக்குமாற்றையும் காட்டிநிற்கின்றன. மலையகத்தில் வெகுசிலரே படிப்பறிவு பெற்றிருந்தனர். பெரும்பாலாருக்கு அவ்வசதி எட்டாக்கனியாகவே இருந்தது. இலங்கையிலே தமிழ்ப் பத்திரிகைத்துறை வளரவில்லை. ஆர்.இராமையா, சி.சுப்பிரமணியம் போன்ற சிலர் இந்திய சஞ்சிகைகளுக்கு ஆத்மீகம் சம்பந்தமான கட்டுரைகளும் கவிதைகளும் எழுதினர். அவர்களது எழுத்துகளிற் சமூக வாழ்க்கைப் பிரச்சனைகள் இடம்பெறவில்லை. மலையகத்தில் மாரியம்மன்தாலாட்டு முதலிய சமயசம்பந்தமான பாடல்களும் யாத்திரைப் பாடல்களும் காமன் கூத்து முதலிய ஆடல் பாடல்களும் பிரசித்தமாயிருந்தன. இக்காலத்தில் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையே போக்குவரத்துக் கட்டுப்பாடுகள் இல்லாமையால் இந்தியாவிலிருந்து நாடகக்குழுக்களும் புலவர்களும் பாடகர்களும் வந்துபோயினர். இதன் விளைவாக காந்தி, பாரதி, நாமக்கல் கவிஞர் போன்றோரின் கருத்துகளும் பாடல்களும் மலையகத்தில் பரவின. இராமாயண பாரத இதிகாச நாடகங்களும் பவளக்கொடி, அரிச்சந்திரன், மதுரைவீரன், கோவலன் முதலிய நாடகங்களும் ஆங்காங்கே நடைபெற்றன.

1. பெருந்தோட்டப் பயிர்ச்செய்கைக்காக இந்தியாவிலிருந்து இலங்கைக்கு அழைத்துவரப்பட்டோர் யாவர்?

______________________________

2. இந்திய சஞ்சிகைகளுக்கு ஆத்மிக சம்பந்தமான கட்டுரைகள் எழுதியவர்கள் யாவர்?

______________________________

______________________________

3. மலையகத்தில் ஆடப்பெறும் கூத்து எது?

______________________________

4. யாருடைய கருத்துகளும் பாடல்களும் மலையகத்தில் பரவின?

______________________________

______________________________

5. மலையகத்தில் நடைபெற்ற நாடகங்கள் எவை?

______________________________________________

______________________________________________

6. இந்தியாவிலிருந்து வந்து போவதற்கு ஏதுவாக அமைந்தது எது?

______________________________________________

______________________________________________

______________________________________________

7. மலையகத்தில் பாடப்பெறும் சமயசம்பந்தமான பாடல் எது?

______________________________________________

7×1=7 புள்ளி

**2. கீழ்க்காணும் உரைப்பகுதிகளுள் உமக்குத்தெரிந்த மொழியிலுள்ள உரைப்பகுதியைப் படித்து அதன் தமிழாக்கத்தை எழுதுக.**

4 புள்ளி

**Deutsch**
**Menschenrechte: Neue Herausforderungen**

Die Vielzahl an nichtstaatlichen Akteuren hat das Menschenrechtssystem komplexer gemacht. Einerseits spielt die Zivilgesellschaft bei der Stärkung dieses Systems eine wichtige Rolle, andererseits haben transnationale Unternehmen und andere nichtstaatliche Akteure, wie etwa ausländische Kämpfer und nichtstaatliche bewaffnete Gruppen, einen wachsenden Einfluss auf die Ausübung der Menschenrechte. Auf multilateraler Ebene werden zurzeit zahlreiche Fragen im Zusammenhang mit der Verantwortung solcher Akteure bei Verstössen gegen die Menschenrechte und das humanitäre Völkerrecht debattiert.

Auch die Schweiz ist sich der Herausforderungen bei der Umsetzung ihrer menschenrechtlichen Verpflichtungen bewusst, selbst wenn ihr allgemein ein hoher Menschenrechtsstandard attestiert wird. Sie legt regelmässig Rechenschaft ab, etwa vor internationalen Kontrollorganen, wie den UNO-Vertragsorganen, oder vor politisch-diplomatischen Gremien, wie dem UNO-Menschenrechtsrat. Die Schweiz muss sich rund alle vier Jahre einem universellen Überprüfungsverfahren (Universal Periodic Review UPR) unterziehen, in dem die übrigen Vertragsstaaten die Menschenrechtssituation in der Schweiz analysieren und (rechtlich unverbindliche) Empfehlungen abgeben.

**Français**
**Droits de l’homme : Nouveaux défis**

La multitude d’acteurs non étatiques a accru la complexité du système des droits de l’homme. D’une part, la société civile joue un rôle important lorsqu’il s’agit de le renforcer ; d’autre part, des multinationales et d’autres acteurs non gouvernementaux, tels les combattants étrangers et les groupes armés non étatiques, exercent une influence croissante sur l’exercice des droits de l’homme. Nombre de questions concernant la responsabilité de tels acteurs en cas de violation des droits de l’homme et d’infraction au droit international public ont récemment fait l’objet de débats au niveau international.

La Suisse est en général connue pour son respect scrupuleux des droits de l’homme. Elle est à ce titre consciente des obligations qui lui incombent pour garantir leur mise en œuvre. Elle rend donc régulièrement

compte de la situation des droits de l’homme sur son territoire, par exemple à des organes internationaux de vérification, comme les organes des traités de l’ONU, ou à des organes à caractère diplomatique et politique,

tel le Conseil des droits de l’homme de l’ONU. Tous les quatre ans environ, la Suisse doit se soumettre à un examen périodique universel (EPU), au cours duquel les autres Etats parties analysent la situation des droits de l’homme en Suisse et formulent des recommandations (dépourvues toutefois de valeur juridique contraignante).

**Italiano**
**Diritti umani: Nuove sfide**

La pluralità di attori non governativi ha reso più complesso il sistema dei diritti umani. Se, da un lato, la società civile svolge un ruolo decisivo nel rafforzamento di questo sistema, dall’altro le imprese multinazionali e gli altri attori non statali, come ad esempio i combattenti stranieri e i gruppi armati non governativi, esercitano un influsso crescente sull’applicazione dei diritti umani. Attualmente, sul piano multilaterale si dibattono numerose questioni relative alla responsabilità di questi attori nelle violazioni dei diritti umani e nelle violazioni del diritto umanitario internazionale.

Anche la Svizzera è consapevole delle sfide che si accompagnano all’attuazione dei suoi obblighi in materia di diritti umani, anche se, in generale, le si riconosce un elevato standard in materia. Essa deposita regolarmente i suoi rapporti presso istituzioni di controllo internazionali, come gli organismi dei trattati dell’ONU, o presso gruppi politico-diplomatici, come il Consiglio dei diritti umani delle Nazioni Unite. Circa ogni quattro anni, la Svizzera deve sottoporsi a una revisione periodica universale (Universal Periodic Review, UPR), nel corso della quale gli altri Stati membri analizzano la situazione dei diritti umani in Svizzera e emettono raccomandazioni (non vincolanti sul piano giuridico).

3. **கீழ்க்காணும் உரைப்பகுதியை மூன்றிலொரு பகுதியாகச் சுருக்கி எழுதுக.**

கால்டுவெல் காலத்தில் தொல்காப்பியமும் கடைச்சங்கப் பனுவல்களும் தலைமைத் தமிழ்ப் புலவர்க்குத் தெரியாது மறைந்து கிடந்தன. மறைமலையடிகள் போலும் தனித் தமிழ்ப் புலவரும் ஆராய்ச்சியாளரும் அக்காலத்திலில்லை. இனவிழிப்புற்ற பெரியார் இயக்கமும், தமிழின் பெருமை உணர்த்தச் சுந்தரம்பிள்ளையும் அன்றில்லை. குமரிநாடென்ற பெயரும் ஒருவரும் அறியார். எல்லாத் துறையிலும் தமிழர் ஆரியருக்கு அடிமைப்பட்டு ஊமையாயிருந்த காலத்தில் கால்டுவெல், வழிகாட்டுவார் இன்றித் தாமே ஆராய்ந்ததனால், நெடுங்கணக்கும் எண்வேற்றுமையும் சமஸ்கிருதத்தினின்று வந்தவையென்றும் உயரிய கலைகளும் அறிவியல்களும் ஆரியர் கண்டவையென்றும் இலங்கைக்கு அப்பால் எத்தீவுந் தமிழர்க்குத் தெரியாதென்றும் தவறாகக் கூறநேர்ந்தது. ஆயினும் மொழித்துறையில் ஓர் உண்மையைத் தெளிவாகக் கண்டார். அது, தமிழ் ஆரியத்திற்கும் சிந்தியத்திற்கும் முந்தியதும் மாந்தன் முதன்மொழிக்கு நெருக்கமானதுமாகும் என்பதே.

4 புள்ளி

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

| பணியகப் பயன்பாட்டிற்கு: | | | |
|---|---|---|---|
| விடைத்தாள் மதிப்பீடு | முழுப்பெயர் | கையொப்பம் | மொத்தப்புள்ளி |
| முதலாம் முறை | | | |
| இரண்டாம் முறை | | | |
| இறுதிப்புள்ளிகள் | | | |